திரைப்பட அரங்குகள்

***62. வினா—திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Semi Permanent Theatre...... கள் துவக்குவதற்கு எங்கெங்கு அரசு அனுமதி கொடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : ஸெமி-பர்மனென்ட் தியேட்டர்கள் நடத்துவதற்கு எத்தனை ஆண்டுகள் தொடர்ந்து அனுமதி தரப்படுகிறது, அரசு சார்பில் தரப்படக்கூடிய கடன் தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் தியேட்டர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு உரிமம் வழங்கப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக தங்கள் விருப்பம்போல் வரையறை செய்ய அவர்களுக்கு அதிகாரம் எதுவும் தரப்படவில்லை. இதற்கு லட்ச ரூபாய் அளவு கடன் தரப்படுகிறது.

Permission for manufacture of liquor

*63. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to permit manufacture of liquor in private sector; and

(*b*) if so, details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (ஆ) இந்தியாவில் அந்நிய மது வகைகளைத் தயாரிப்பதற்காக தொழிற்சாலைகள் அமைப்பதற்கு சவுத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்ஸீஸ்) லிமிடெட், சென்னை. அருணா சுகர்ஸ், சென்னை, வோரியன் இண்டஸ்ட்ரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சென்னை, ஆகியவைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. வடிசாலைகள் (ப்ரூவரீஸ்) தொடங்குவதற்கு எம்,எஸ்.எம். சுல்தான் மரக்காயர் அண்டு சன்ஸ், சென்னை. கோத்தாரி அண்டு சன்ஸ், சென்னை, நேஷனல் கம்பெனி, சென்னை, ஆகியவற்றிற்கும் திருவாளர்கள் ஏ. எல். சீனிவாசன், சென்னை, கே. ஆர். நடராசன், பொள்ளாச்சி, ஆகியோருக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : May I know whether the Government will come forward to start such liquor production in the co-operative sector?

இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.